திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் ஆடுதுறையிலே ஒரு நிரந்தரமான நேரடிக் கொள்முதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய முடிவெடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1992–93-இல், எனக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்திலே ஆடுதுறை இல்லை. இருந்தாலும் உறுப்பினருடைய வேண்டுகோள் பரிசீலிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 448. திரு. ஜெ. பாலகங்காதரன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

448—

தொழிலாளர் நலக் காப்பீட்டுறுதி மருத்துவமனையில் படுக்கை வசதிகள் செய்தல்.

*3887 திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருத்தங்கல் நகரில் தொழிலாளர்கள் அதிகம் உள்ளதால் அங்குள்ள தொழிலாளர் நலக் காப்பீட்டுறுதி மருத்துவ மனைக்கு படுக்கை வசதிகள் கொண்ட கட்டிடம் கட்டித் தரப் படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருத்தங்கலில் தற்போது இயங்கி வருவது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் ஆகும். எந்த மருந்தகத்திற்கும் படுக்கை வசதிகள் அமைப்பதில்லை. மேலும் திருத்தங்கலுக்கு மிக அருகாமையிலுள்ள சிவகாசியில்

50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை இயங்கி வருவதாலும் ஒரு மருத்துவமனை துவங்குவதற்குரிய தொழிலாளர் எண்ணிக்கை திருத்தங்கலில் இல்லாமையாலும் திருத்தங்கலில் படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்ட இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே சிவகாசியில் மாபெரும் வெடி விபத்து பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்டு, கிட்டத்தட்ட 40 உயிரினங்கள் பலி ஏற்படும் ஒரு நிலைமை ஏற்பட்டது. அந்தக் கொடூரமான வெடி விபத்துக்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அந்த வெடி விபத்திலே இறந்ததற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், தீக்காய விபத்துச் சிகிச்சைப் பிரிவு இல்லாததுதான் ஆகும். எனவே, அந்தத் தீக்காயப் பிரிவானது ஸ்டெர்லைஸ்ட் ஆக இருக்க வேண்டும். அதையாவது தொழிலாளர் நலக்காப்பீட்டு மருத்துவமனையாகிய திருத்தங்கலில் அமைத்துத் தரப்படுமா? படுக்கை அறையானது ஏ.சி. பண்ணப்பட்டு திருத்தங்கலில் — ட்வின் சிட்டியாக இருக்கும் திருத்தங்கல் நகரில்—அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவகாசியிலே 50 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கோருகிற ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 449. திரு. தே. ஜனார்தனன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

449—

## சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒரே மாதிரியான பணி விதிகள்.

*5302 திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான பணி விதிமுறைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?